DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.177/2017**

Deposition of witness for Prosecution அ.சா.7

| | | |
|---|---|---|
| பெயர் | : | அஜித்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கணேசன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.02.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காருகுடியில் வசித்து வருகிறேன். முன்பு தேவகோட்டை சரஸ்வதி வாசக சாலையில் வாடகைக்கு குடியிருந்தோம். ஆஜர் எதிரியை தெரியும். நான் வண்டியில் போய்க்கொண்டிருந்தபோது வண்டியில் இருந்து விழுந்துவிட்டேன், ஆஜர் எதிரிதான் காரணம் என்று நினைத்து அவர்மீது புகார் கொடுத்தேன். ஆனால் எதிரி காரணம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால் ஆமாம். நானும் எதிரியும் சமாதனம் ஆகிவிட்டோம். கடந்த 18.12.2016 ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 18.12.2016 ம் தேதி காலை 11.30 மணிக்கு வெங்களூர் சென்று வரும்போது எதிரிகள் வழிமறித்தார்கள் என்றும், அசிங்கமாக திட்டினார்கள் என்றும் அருகில் கிடந்த கம்பை எடுத்து தலை, வலது கால் ஆகிய இடத்தில் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், கையில் வைத்திருந்த பாட்டிலை வைத்து குத்த வந்தார் என்றும், கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், புகார் கொடுத்துவிட்டு பின்னிட்டு விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதான மனு தாக்கல் செய்து தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை:**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.